ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2374/32 - 2024 මාර්තු මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.03.07

2374/32 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 4/1/අත්පත්/93/අයිවිදුලි.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/7/2020/HW/207.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மல்லவ பிற்றிய பிரதேச செயலாளர் பிரிவில் வட்டார இல. 713, மெகில்ல (வடக்கு) கிராம அலுவலர் பிரிவில் மெகில்ல கிராமத்தில் குருநாகல் மாவட்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடஸ்ரல் வரைபட இல. 420202, வலய இல. 07, தாள் இல. 10 இல் 2023.02.17 ஆந் திகதியில் குறிப்பிடப்பட்ட 0.1609 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய 1 தொடக்கம் 3 (03) காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

01. **துண்டு இல. 1**

காணியின் பெயர் : திப்பிற்றியவத்த; உரிமை கோருபவர் : அரசு; விஸ்தீரணம் : 0.0001 ஹெக்டயார்.

வடக்கு : துண்டு இல. 02; கிழக்கு : துண்டு இல. 03; தெற்கு : துண்டு இல. 03 மற்றும் 04; மேற்கு : துண்டு இல. 02.

02. **துண்டு இல. 2**

காணியின் பெயர் : திப்பிற்றியவத்த; உரிமை கோருபவர் : அரசு; விஸ்தீரணம் : 0.1525 ஹெக்டயார்.

வடக்கு : இல. 717, பல்லேகெட்டுவான கிராம அலுவலர் பிரிவு மற்றும் கடஸ்ரல் வரைபட இல. 420204, வலய இல. 01; கிழக்கு : கடஸ்ரல் வரைபட இல. 420204, வலய இல. 01, துண்டு இல. 03, 01, 04 மற்றும் கடஸ்ரல் வரைபட இல. 420202, வலய இல. 07, தாள் இல. 08, துண்டு இல. 223; தெற்கு : கடஸ்ரல் வரைபட இல. 420202, வலய இல. 07, தாள் இல. 08, துண்டு இல. 223 மற்றும் கடஸ்ரல் வரைபட இல. 420202, வலய இல. 07, தாள் இல. 02, துண்டு இல. 124; மேற்கு : இல. 717, பல்லே கெட்டுவான கிராம அலுவலர் பிரிவு.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

03. **துண்டு இல. 3**

காணியின் பெயர் : திப்பிற்றியவத்த; உரிமை கோருபவர் : தேவத பெச்ஜலாகே வதுவாகே முதுவ எனும் தேவபக்ஸ சந்ரசேன; விஸ்தீரணம் : 0.0083 ஹெக்டயார்.

வடக்கு : துண்டு இல. 02 மற்றும் கடஸ்ரல் வரைபட இல. 420204, வலய இல. 01; கிழக்கு : கடஸ்ரல் வரைபட இல. 420204, வலய இல. 01; தெற்கு : துண்டு இல. 04; மேற்கு : துண்டு இல. 01 மற்றும் 02.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மல்லவபிற்றிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விசாரணைக்கு உரிமை கோருபவரினால் முகவராக அனுப்பப்படுபவர் உரிமை குறித்தொதுக்கப்பட்டமையை கடிதம் மூலமாக நிரூபிக்கப்படாவிட்டால் முகவராக அனுப்பப்படுபவரின் கூற்று அல்லது சாட்சிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பது குறித்து கவனம் செலுத்தவும்.

டபிள்யூ.பி.சீ.என். பதிரன,
பிரதேச செயலாளர்,
மல்லவபிற்றிய.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மல்லவபிற்றிய,
2023, நவெம்பர் 13.

EOG 03 - 0062